மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(3) ஒழுங்குப் பிரச்சினை (தொடர்ச்சி)

இ. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I stand on a point of order. காலையிலே ஒழுங்குப் பிரச்னையில் நாங்கள் பேசிய குறிப்புகள் அனைத்தும் அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எந்தெந்த சொற்கள் அன்-பார்லிய மெண்டரி வார்த்தைகள் என்பதை இங்கே எடுத்துச் சுட்டிக்காட்ட இய லுமா? எங்களைப் பொறுத்தவரைக்கும் . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதில் எல்லாவற்றையும் நீக்கி விட்டேன். பார்லிமெண்டரி, அன் பார்லியமெண்டரி என்று இல்லை. அந்த குழப்பம் கூச்சலுக்கு நடுவில் வருகிற அத்தனையையும் நீக்கிவிட்டேன். அப்படி நீக்குவதற்கான உரிமை எனக்கு இருக்கிறது. அதைப்பற்றிய விளக்கம் தருவதற்கில்லை . . . (குறுக்கீடு)

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ரூல்லைப் படிக்கிறேன். நீக்குவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றாலும், நீங்கள் இந்த அவையிலே இந்த விதிக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். நான் ரூல்லைப் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அதற்கு முன்பாக, இன் னொரு நீக்கம். காலையிலே கேள்வி நேரத்தின் போது, திரு. பாபு ஜனார்த் தனன் அவர்கள் * * என்று குறிப்பிட்டுப் பேசினார். அதையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 25]

Thiru R. Umanath : I am on rules. If the Speaker is of the opinion that words have been used in debate which are defamatory or unparliamentary or undignified, he may in his discretion order that such words be expunged from the proceedings of the House. என்னுடைய பாயின்ட் என்னவென்று சொன்னால், காலையிலே நடந்ததிலே அந்த மாதிரி அன்-பார்லிமெண்டரியாக, அன்-டிக்னிபைடாக என்ன இருக்கிறது. சப்போஸ் நானே ஒரு கான்சல் ஜெனரல் என்று வைத்துக் கொள்ளுங்கள், அது ஒரு ஃபேக்டாக இருந்தால் அதை எப்படி எக்ஸ்பென்ஜிலே வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல்ஸ் இருக்கிறது. அதைச் சொல்லி விடுகிறேன், விதி 112 (8)-ல்

'The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the member, when in his option it is an abuse of the right of raising a point of order.'

ஆகவே, நான் அனுமதி மறுத்துவிட்டேன், மறுத்த பிறகு பேசியது எதுவாக இருந்தாலும் சபைக் குறிப்பில் ஏறாது என்பதுதான் பொருள். பேரவை விதி ஒன்றை நீங்கள் சொன்னீர்கள். பேரவை விதிகளின்படிதான் நானும் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் ஒரு கட்டத்தில் அனுமதித்த பிறகு நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

'If I have the right to grant, I have the right to withdraw.'

MR. SPEAKER: Now I withdraw.

திரு. ரா. உமாநாத்: இப்போது withdraw செய்கிறேன் என்று சொன்னீர்கள். இதுவரை இருக்கக்கூடிய 'ஃபாக்ட்ஸ்' யைக்கூட எக்ஸ்பஞ்ச் செய்வது என்ன நியாயம்? பி.எ.ஸி. கூட்டுவதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் குழப்பமான சூழ்நிலையில் எதில் ஃபாக்ட்ஸ் இருக்கின்றன எதில் ஃபாக்ட்ஸ் இல்லை என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) பி.எ.ஸி.-யை 15 நிமிடங்களில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கூட்டி விவாதிக்கலாம் என்று நான் கேட்டுக்கொண்டேன். அதை ஒத்துக் கொள்ள முடியாது என்று வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். நான் என்ன செய்வது? நீங்கள் ஒத்துக்கொள்ள மறுத்ததை மீறி நான் எப்படி பீ.ஏ.ஸி. யைக் கூட்ட முடியும்?

திரு. ரா. உமாநாத்: பி. ஏ. ஸி. கூட்டவேண்டுமென்று இப்போதும் நாங்கள் சொல்லவில்லை.

We have got the right to raise a point of order so long as the subject is kept alive. The issue is alive. It is a different matter.

நான் சொல்வது என்னவென்றால் * * *

MR. SPEAKER: Do not go into the details. I will not allow you to go into the details. You are a good Parliamentarian. You must not use your discretion in an unnecessary way. It is not good on your part.

திரு. ரா. உமாநாத்: எங்களுக்கு இருக்கக்கூடிய சில குறைந்தபட்ச உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களது உரிமைகளைப் பாது காக்க உங்களோடு முழு அளவிற்கு ஒத்துழைப்பேன். ஆனால் என் வேண்டு கோளைப் புறக்கணித்ததற்குப் பிறகு நான் என்ன செய்யமுடியும்?

திரு. ரா. உமாநாத்: எதிர்ப்பு வந்தவுடன் டிமா என்று சொன்னால் டோட்டல் எக்ஸ்பஞ்ச் செய்வது என்று சொன்னால் மறுக்கப்படாத ஃபாக்ட்ஸைப் பொறுத்தவரையில் அதை எப்படி நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ய லாம், அது நியாயம் அல்ல. டோட்டலாக எக்ஸ்பஞ்ச் செய்வது என்பது சரியல்ல. நீங்களாகப் பார்த்து இவை இவை அன்பார்லிமெண்டரி வேர்ட்ஸ் என்று சொன்னால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. அது உங்கள் ரைட். கண்ஸேர்ன்ட் மெம்பரே மறுக்காத ஒரு ஃபாக்டை எக்ஸ்பஞ்ச் செய்வது என்று சொன்னால் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேநேரத்தில் மூன்று பேர்கள், நான்கு பேர்கள் பேசினால் எப்படி அவைக் குறிப்பில் ஏற்ற முடியும்?

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே,

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்கள் இன்று உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார்கள்.

THIRU KUMARI ANANDAN: You have told us that a portion of the proceedings has been expunged. What is the portion? You have not expunged the portion totally. We have given the facts. How can the Hon. Speaker expunge the facts?

MR. SPEAKER: The entire thing went in pandemonium.

THIRU KUMARI ANANDAN: It was audible.

MR. SPEAKER: It may be audible to you. It was not audible to me.

THIRU R. UMANATH: *** *** It is a fact. I do not understand at all how the entire thing has been expunged. அவர் பேச ஆரம்பித்தபோது பாண்டிமோனியம் இல்லை. உங்களுக்கு எக்ஸ்பஞ்ச் செய்ய உரிமை இருக்கிறது. ஆனால் ஃபாக்ட்ஸாக உள்ளதையும் சேர்த்து எப்படி எக்ஸ்பஞ்ச் செய்ய முடியும்? திரு. சித்தன் தயவில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் தயவில் இன்னொரு உறுப்பினர் இல்லை. எதற்கும் உள்நோக்கம் கற்பித்தால் நான் பொறுப் பேற்றுக் கொள்ள முடியாது.

திரு. ரா. உமாநாத் : உள்நோக்கம் கற்பிப்பதாக இல்லை. அவை முன்னவர் அவர்கள் கூறியவை, தாங்கள் பேசியவை எல்லாம் இருக்கின்றன. நாங்கள் கூறியது பூராவையும் எக்ஸ்பஞ்ச் செய்வது என்றால் என்ன நியாயம்?

திரு. குமரி அனந்தன் : குற்றம் சாட்டக்கூடாது. ஐயத்தை வெளியிடு கிற வகையில் உறுப்பினர்கள் பேசலாம் என்ற கருத்து தெரிவித்ததன் அடிப் படையில் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பத்திரும்ப அந்தப் பிரச் னைக்கே போகிறீர்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

THIRU KUMARI ANANDAN: There is Constitutional provision.

MR. SPEAKER: There is no such provision in the Constitution. I have seen the Constitution. I have read the Constitution.

THIRU KUMARI ANANDAN: I earnestly seek your direction on this point of order with regard to expunction (கூச்சல், குழப்பம்)

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை வற்புறுத்த முடியாது. (கூச்சல், குழப்பம்).

திரு. கு. ரமணி: நீங்கள் படித்த ரூல் 112-லே . . (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னையைப் பற்றி எழுதிக் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எனது தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, எழுதிக் கொடுக்க வேண்டுமே தவிர, திரும்பத் திரும்ப அதைப்பற்றிய விவாதத்தை இங்கே எழுப்ப நான் அனுமதிக்க முடியாது,

திரு. கு. ரமணி: பேரவை விதி 112-ன் கீழ் நீங்கள் சொல்வது

The Speaker may order expunction, when in his opinion it is an abuse of the right of raising a point of order.

இங்கே என்ன அப்யூஸ்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொன்னதை மீறுவதுதான் அப்யூஸ். யூஸ் அதற்கு அப்போசிட் அப்யூஸ். எழுதிக் கொடுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். மேலும் இங்கே பேசுவதுதான் அப்யூஸ். (கூச்சல், குழப்பம்).

திரு. ரா. உமாநாத்: முதலில் அனுமதித்தீர்கள், உறுப்பினர் பேசினார். அப்போது நீங்கள் உங்கள் இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தீர்கள். இவர் ஆட்சேபித்தவுடன், கொடுத்த அனுமதியைத் திரும்பப் பெறுவதாக அப்புறம் சொன்னீர்கள். நீங்கள் சொன்ன பிறகு பேசியதை நீக்கலாம். உங்கள் அனுமதியோடு முன்னால் பேசியவைகளை யும் நீக்குவது என்பது என்ன நியாயம்? எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. (கூச்சல், குழப்பம்)

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு முழுப் பாதுகாப்பு உண்டு. அதுபற்றி நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். என் தீர்ப்புக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு செயல்படுவதுதான் அவையை முறையாக நடத்திச் செல்ல உதவும். நான் சொன்னபடி எழுதிக் கொடுங்கள். இங்கே அந்தப் பிரச்னையைத் திரும்பவும் எழுப்ப அனுமதியில்லை.

திரு. ரா. உமாநாத்: எல்லாப் பிரச்சினைகளையும் எழுதிக் கொடுக்கச் சொல்லுகிறீர்களா? எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாங்கள் வெளியேறுகிறோம்.

(அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி, ஆகியவற்றின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

4. கவன ஈர்ப்புகள்.

அ. கோவை மாவட்டம் சிறுமுகை "சவுத் இந்தியா விஸ்கோஸ்"-லிருந்து வெளியேறும் கழிவு நீரை பவானி ஆற்றில் கலக்க விடுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்து திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், ச. பாலகிருஷ்ணன், ஆர். ரங்கசாமி மற்றும் துரை ராமசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள திருவாளர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், ரயான், கார்பன்-டை சல்பேட், செயற்கை நூல், கந்தக அமிலம் முதலிய பொருட்களை தயாரிக்கின்றன. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 110 லட்சம் கேலன் கழிவு நீரை வெளியேற்றுகிறது.